**கலிகமுவ பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மே 14 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 30 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கலிகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீடு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 208,031 பெறுமதியான நூலக புத்தகங்களின் ரூபா 186,000 பெறுமதியான புத்தகங்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கு சரி செய்ய வேண்டும். | மிளாய்வாண்டின் நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யும் போது பெற்ற கழிவுக்கும் நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டதனால் நூலக புத்தகங்கள் சரியான பெறுமதியால் காட்டப்பட்டுள்ளது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் மோட்டார் வண்டி மற்றும் மாட்டு வண்டி கணக்கு மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகள்/அறிக்கைகளின் காட்டப்பட்ட மீதிகளிற்கிடையில் ரூபா 5,411,893 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | பதிவேடுகள் சரி செய்ய வேண்டும் | உள்ளுராட்சி அமைச்சினூடாக நன்கொடையாக கிடைத்த பெகோ லோடர் மீண்டும் அவ் அமைச்சுக்கு மீள் கையளிக்கப்பட்டுள்ளது. அப் பெறுமானத்தை பதிவேடுகளில் அகற்றி பதிவேடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு பணம், பணத்திற்கு சமனானவையின் கீழ் | கணக்க்களை சரி செய்ய வேண்டும் | இங்கு ரூபா 168,830 பெறுமதியான 03 காசோலைகளை காசு புத்தகத்தில் குறித்து அப் |

| | |
|---|---|
| குறிப்பிடப்பட்டிருந்த மக்கள் வங்கியின் ஊழியர் கடன் கணக்கின் மீதி காசு புத்தகத்த்தின் பிரகாரம் ரூபா 266,234 ஆன போதும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 97,404 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. | பெறுமதிகளை சீராக்கி சரியாக வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்ட போதும், அது வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்படும் போது தவறுதலாக ஏற்பட்ட ஒன்றானதால் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 பிரிவுகள் மற்றும் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 33 | ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த வீத வரி மற்றும் ஏக்கர் வரி ரூபா 121,001 யினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த ரூபா 121,001 நிலுவை வீத வரி மற்றும் ஏக்கர் வரி அறவிடுவதற்கு வருமான பரிசோதகர்களுக்கு திட்டமொன்று தயாரித்து வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் இப்போது அத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறார்கள். |
| (ஆ) | 2000 இல் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இல் 56 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கபட்ட 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமனி அறிவித்தல். | சுற்றாடலுக்கு கழிவுகளை வெளியிட்டு நடாத்திச்செல்லும் 32 கைதொழில்களுக்கு சுற்றாடல் பாதுபாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய வியாபாரிகளிற்கு அறிவூட்டல் கடிதம் தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வெளியிடப்பட்ட போதும் வங்கியிற்கு | நிதிப் பிரமாணம் | அனைத்து காசோலைகளையும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்படாத ரூபா 83,412 பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 2010 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 779,978 ஆன வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது வைப்பில் உள்ள ரூபா 726,978.73 ஆன வேலை பெறுவனவிற்குரிய வேலை நடவடிக்கைகள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படவில்லை. அதன் காரணமாக அப் பணத்தை வழங்கிய நிறுவனங்களிற்கு மீள் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | சபைக்கு சொந்தமான 21 வாகனங்களுக்குரிய ஓட்ட குறிப்புகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில் லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தின ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கை கணக்காய்வாளருக்கு அனுப்புவதற்க நடவடிக்கை எடுக்க படுகிறது. |
| (ஈ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க உள்ளூராட்ச்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 02 பந்தி | 05 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டிய வீத வரி மதிப்பீடு 2009 ஆண்டின் பின் மேற்கொள்ளப்படாத தனால் அபிவிருத்தி வேலைகளின் வருடாந்த பெறுமதி அதிகரிக்கும் சொத்துக்களிலிருந்து சபையிற்கு அறவிட முடிமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | 2014 ஆண்டு முதல் பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திடம் வீத வரி மதிப்பீட்டிற்காக அவ்வப்போது கோரிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கு பதிலாக இந்த வருடத்தின் மதிப்பீடு நடவடிக்கைகளுக்காக பெறுமதி உத்தியோகத்தர்கள் வருகை தந்ததுடன் அந் நடவடிக்கைகள் இறுதி கட்டத்தின் உள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை விஞ்சிய செலவு ரூபா 12,470,437 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 8,462,617 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2..1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 2,461,368 | 2,391,123 | 2,276,462 | 488,169 | 2,389,000 | 2,338,024 | 2,370,524 | 423,821 |
| (ii) | வாடகை | 5,614,245 | 5,003,541 | 2,923,622 | 525,146 | 4,483,775 | 3,296,450 | 2,317,060 | 531,671 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 900,200 | 900,200 | 1,158,566 | 22,250 | 880,200 | 914,870 | 897,233 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 15,193,034 | 15,193,034 | 15,048,029 | - | 14,556,000 | 14,556,000 | 15,505,332 | - |

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற் குறிப்பிட்ட வருமான அறிக்கையில் காட்டப்பட்ட பில்இடப்பட்ட வருமானத்திற்கும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பில் இடப்பட்ட வருமானத்திற்குமிடையில் பின்வருமாறு வேறுபாடு நிலவியது..

| விபரம் | வருமான அறிக்கையின்படி வருமானம் | நிதிக் கூற்றுக்களில் படி வருமானம் | வித்தியாசம் |
|---|---|---|---|
| வீத வரி மற்றும் குத்தகை | 2,391,123 | 2,398,623 | 7,500 |
| வாடகை | 5,003,541 | 3,579,392 | 1,424,149 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 900,200 | 1,176,816 | 276,616 |
| ஏனைய வருமானம | 15,193,034 | 22,468,908 | 7,275,874 |

**பரிந்துரை**

வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**

வீத வரி மற்றும் குத்தகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானம் அதிகரித்தமைக்கு பில் இடப்பட்ட வருமானத்தை விட சேகரித்த வருமானம் அதிகரித்தமை மற்றும் ஆண்டு இறுதியில் பெற்ற முத்திரைக் கட்டண வருமானம் காரணமாக இருந்தது. வாடகை வருமானம் குறைவுக்கு கொட்டியாகும்புற இறைச்சி கடை வருமானம் இழந்தமை தாக்கம் செலுத்தியிருந்தது.

### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாவாண்டில் இறைச்சிக்கடை வியாபார உரிமையை குத்தகை வழங்கி ரூபா 2,547,000 வருமானம் மதிப்பிடப்பட்ட போதும் அதற்கான பொருத்தமான இடமொன்று இல்லாததால் ரூபா 1,846,500 ஆன வருமானம் இலக்கப்பட்டிருந்தது. | மதிப்பிடப்பட்ட வருமானங்கள் அடைந்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொடியாகும்புற இறைச்சிக் கடையை 2018 டெக்டர் வழங்கிய போதும் அது உடைத்தகற்ற தீர்மானிக்கப்பட்டிருப்பதால் நடாத்திச் செல்ல முடியாதென் குத்தகைகாரரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இறைச்சிக் கடையிலிருந்து 2014 முதல் கிடைக்க வேண்டிய ரூபா 525,146 நிலுவையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொடியாகும்புற இறைச்சிக் கடை தொடர்பான வழக்கு தீர்ப்பின் படி குத்தகைகாரரின் சொத்து விபரங்களை சமர்பிக்குமாறு மதிப்பிற்குரிய நீதிமன்றம் கட்டளை இட்டுள்ளதுடன் அது தொடர்பான தகவல்கள் சமர்பிக்கப்பட்டுளளன. இது வரை அது தொடர்பான இறுதித் தீர்ப்பு வழங்கப்படவில்லை. |

### 2.2..3 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குத்தகை வழங்க முடியுமான காணிகளை இனங்காணுவதற்கு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டில்லாததுடன், 12 இடங்களில் விளைச்சலை குத்தகைக்கு வழங்குவதற்கு டென்டர் கோரி இருந்த போதும் 06 இடங்கள் மாத்திரம் குத்தகைக்கு வழங்கியிருந்தது. | வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 இல் விளைச்சலை குத்தகைக்கு வழங்குவதற்கு 12 இடங்கள் தொடர்பாக டென்டர் கோரி இருந்த போதும் அவற்றில் 06 இற்காக டென்டர்காரர்கள் முன்வரவில்லை. |

### 2.2.4 காணி விற்பனை மீதான வரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 154 பிரிவின் பிரகாரம் துண்டாகப்பட்டு விற்கப்படும் காணிகளில் விற்பனை பெறுமதியின் அடிப்படையில் ஒர் சதவீத வரி அறவிட | சட்டத்தின் பிரகாரம் வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க | காணி பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பதிவேடுகளை பரிசீலனை செய்து உரிய வரி |

| | | |
|---|---|---|
| வேண்டிய போதும் விற்பனை செய்யப்பட்ட 03 காணிகளின் மதிப்பீட்டு பெறுமானத்தின் அடிப்படையில் மாத்திரம் வரி அறவிடப்பட்டிருந்தது. | வேண்டும். | தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.5 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,687,573 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 43,154,045 ஆனது. | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2018 ஆகஸ்ட் மாதம் தவிர ஏனைய மாதங்களிற்காகவும், 2019 பெப்ரவரி வரையும், நீதிமன்ற தண்டப்பண அட்டவணை கிடைத்துள்ளது. அதற்குரிய பணத்தை துரிதமாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். 2018.12.31 திகதிக்கு நிலுவை முத்திரைக் கட்டணத்தில் 2017 ஆண்டிற்காக சகல முத்திரைக் கட்டணத்தையும் மற்றும் 2018 மே வரையும் முத்திரைக் கட்டணம் தற்போது கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் 2018 ஆண்டிற்குரிய எஞ்சிய முத்திரைக் கட்டணத்தை துரிதமாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) துணைச் சட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை மேற்கொள்வதற்கு துணைச்சட்டம் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 திகதி வரையும் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் வாசிகசாலை நடவடிக்கைகளுக்காக துணைச் சட்டம் அது தற்போது உள்ளூராட்சி உதவி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏனைய பிரிவுகளிற்கான 16 துணைச்சட்டங்கள் 2019 ஜூலை 09 திகதி மகாசபை நிகழ்சி |

| | | |
|---|---|---|
| | | நிரலிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. |

(ஆ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செயல் நடவடிக்கை திட்டப்படி மேற்கொள்ள திட்டமிட்ட 06 கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தினால் அடைய எதிர்பார்க்கும் நோக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மலசலகூட வசதியில்லாத 02 குடும்பங்களிற்கு மலசலகூடம் வழங்கல் 2018 ஆண்டின் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தால் பெற்றுக் கொடுக்க இருந்த போதும் உரிய காலத்தில் அப்பணம் கிடைக்காததால் அச்செயலை செய்ய முடியவில்லை. ஏனைய் விடயங்களின் பால் எதிர்காலத்தில் கவனம் செலுத்துகிறேன். |

(இ) **கைவிடப்பட்ட வேலைகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| i மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டில் நிரைவேற்ற கைச்சாத்திடப்பட்டிருந்த ரூபா 6,272,750 பெறுமதியான 10 வேலைகள் செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது. | குறித்த வேலைகளின் செயல்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இங்கு உள்ளூராட்சி வீதி அபிவிருத்தியின் கீழ் புதிய வேலை கருத்திட்டங்களுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதும் வேலை பூர்த்தி செய்யப்படவில்லை. துரித கிராம அபிவிருத்தி கருத்திட்டங்கள் இதன் மூலம் கைச்சாத்திடப்பட்ட/ படாத வேலை ஆரம்பிக்கப்படாத அனைத்து கருத்திட்டங்களையும் இடைநிறுத்துமாறு 2018 நவம்பர் 27 திகதிய கடிதம் மூலம் மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார். |
| ii மதிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,943,750 பெறுமதியான 07 வேலைகள் செய்யப்படவில்லை. | குறித்த வேலைகளின் செயல்களை | பலபத்தாவ கடிகமுவ பாதை, மாபொட தெலியெல்ல பாதை, 10 ஏக்கர் 10 |

| | | |
|---|---|---|
| | பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீடுகள் மத்திய பாதை எனும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் முறையே 2017.09.13, 2017.08.23 மற்றும் 2017.07.18 திகதியுடனாக மதிப்பீடு கோரப்பட்டது. மதிப்பிற்குரிய ஆளுநரின் 2017.10.17 திகதிய கடிதம் மூலம் எதிர்காலத்தில் செயற்படுத்தும் அபிவிருத்தி கருத்திட்டங்களை அவரின் அங்கீகாரத்தின் கீழ் செயற்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |

(ஈ) **கழிவுப் பொருள் முகாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மலசல கழிவுகளை வெளியிட உரிய இடமொன்று சபைக்கு இல்லாததால் வாடிக்கையாளர்களுக்கு கலி சேவையை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இலக்கப்பட்டிருந்தது. | உரிய வெளியீட்டு வேலைத் திட்டமொன்றுத யாரிக்கப்பட வேண்டும். | தற்போது எமது சபை கழிவுப் பொருள் முகாமை மையமொன்றை வன பாதுகாப்பு திணைக்களத்திற்குரிய காணியில் நடாத்திச் செல்கிறது. அதை தற்போது கழிவுப் பொருள் முகாமைக்காக பயன்படுத்தப்படுகிறது. அதனால் மலசல கழிவு மீள்சுழற்சி முறைமை ஒன்றை நிறுவுவதற்கு இக்காணி போதாமையினால் இன்னும் 02 ஏக்கர் காணியை கோரி வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

(உ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான குருங்காகல நிகழ்சி திட்டங்கள் செயற்படுத்தி இருந்த போதும், நீண்ட கால திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை | 2019-2021 நான்கு வருட திட்டத்தில் நிலைபேறான நோக்கங்களை அடைந்து கொள்ளவதற்கான கருத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக |

| | | |
|---|---|---|
| | எடுக்க வேண்டும். | அறிவிப்பதுடன் அதன் பிரதி 2019 மார்ச் 15 திகதியிடலுடன் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்ட காலமாக நிலவிவரும் இரண்டாம் மட்ட 06 வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்காததுடன் வேறு திணைக்களங்களிலிருந்து இனைக்கப்பட்ட இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக மாதாந்தம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. |

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 29 திகதிய 2052 இலக்க வர்தமாணி மூலம் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் மூலதன பெறுமதியில் 2 சதவீதத்தை விஞ்சாத வரி அறவிட எதிர்பார்த்த போதும் அவ்வாறான காணிகள் தொடர்பாக ஆய்வு மேற் கொள்ளப்பட்டு வரி அறவிட நடவடிக்கை எடுத்திருக்வில்லை. | காணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இச் சபைக்கு 03 வருமான பரிசோதகர் பதவி அங்கீகரிக்கப்பட்டுள்ள போதும், 2018 ஆண்டு ஒருபர் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டார். அதனால் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் பொருப்பு அவரிற்குள்ளதால் இது தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது. இவ்வாண்டு அது தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமை**

**3.4.1 சொத்துக்கள் பதிவிடப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களை தெளிவாக இனங்காண நிலையான சொத்து ஆய்வொன்றை மேற்கொண்டு பெறுமதி மதிப்பிட்டு பதிவிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான காணிகள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு பதிவிடநடவடிக்கை எடக்க வேண்டும். | நிலையான சொத்துக்களை தெளிவாக இனங்காண்டு அச்சொத்துக்களை சந்தைப் பெறுமதியிற்கு மதிப்பிடும் நடவடிக்கை தற்போது நடைபெறுவதாக அறிவிக்கிறேன். |

**3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதிவு உரிமை வேறு அரச நிறுவனமொன்றிற்கு சொந்தமான ரூபா 6,221,373 பெறுமதியான வாகனத்தின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 பெப்ரவரி 01 திகதி அன்பளிப்பாக கிடைத்த WP ZB – 0329 கொம்பெக்டரின் உரிமையை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.4.3 விளைவற்ற/ குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஜுன் மாதம் முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட டெக்டரை பழுதுபார்க்கவோ அல்லது அதற்காக உரிய நடவடிக்கை எடுக்க செயற்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான பயன்படுத்தாத சொத்துக்களிலிருந்து பயன்பெறுவதற்கு முறைமையொன்று தயாரிக்க வேண்டும். | 37-9574 இலக்க டெக்டர் வண்டி 1991 ஆண்டின் போது சபைக்கு கிடைத்துள்ளது. 28 வருடங்கலாக ஓட்ட நடவடிக்கையில் ஈடுபடுத்திய வண்டியொன்றாகும். தற்போது ஓட்டத்திற்கு பொருந்தாத நிலையில் நிலவியதால் பொது நிதி சுற்றறிக்கை 02/2015 ன் குறிப்பிட்ட முறையில் எதிர் காலத்தில் பராதீனம் செய்யப்படும். |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் | பெறுகைகள் | மீளாய்வாண்டிற்காக |

| | | |
|---|---|---|
| திட்டமொன்று தயாரிக்கப்பட்டில்லாததுடன் ஆண்டினுள் ரூபா 4,438,570 பெறுமதியான பெறுகைகள் மேற்கொண்டிருந்தன. | திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெறுகைகள் திட்டமொன்றில்லா போதிலும் அவ் வருடத்தின் பாதீடு ஒதுக்கீட்டினுள் அலுவலகத்திற்கு தேவையான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதும் 2019 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 (நிதி மற்றும் நிருவாக) விதி 168 (1) பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் அடுத்த ஆண்டில் மார்ச் 31 தகதிக்கு முன் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்கள் 2019 மே 14 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உரிய திகதிக்கு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டில்லை. |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிக்காக பாதீட்டினூடாக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த 24 செலவின விடயங்களில் ரூபா 4,048,500 ஆன மொத்த ஒதுக்கீடும் 10 செலவின விடயங்களில் ரூபா 3,046,000 ஆன ஒதுக்கீடுகளின் 50 சதவீதத்திற்கும் 88 சதவீதத்திற்குமிடையிலான வீச்சளவை பயன்படுத்தியிருக்கவில்லை. | பாதீடு நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 கணக்கு ஆண்டின் எதிர்பார்த்த நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டண வருமானம் கிடைக்காததால் எதிர்பார்த்த திட்டங்களுக்கு செலவிட முடியாதிருந்ததுடன் செலவு விடயங்களின் ஒதுக்கீட்டு பெறுமானங்களை செலவிட முடியாதிருந்தது. |

### 4.3 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| --------------------------------------------- | --------------- | ----------------------------------------------- |
| உள்ளக கணக்காய்விற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அங்கு உள்ளடங்கிய விடயங்களை போதியளவு பரிசீலனை செய்திருக்கவில்லை. | திட்டமிடளுக்கமைய உள்ளக கணக்காய்வு மேற்கொள்ள வேண்டும். | 2019 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் முன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என அறிவிக்கிறேன். |

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| --------------------------------------------- | --------------- | ----------------------------------------------- |
| மீளாய்வாண்டினுள் ஒர் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட்டு வெற்றிகரமான உள்ளக கட்டுப்பாடொன்றை பேண வேண்டும்.. | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனை 1/2018/14 மற்றும் 2018.10.19 திகதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிருவப்படுவது தொடர்பாக ஆலோசனை பிரகாரம் 2018 ஆண்டின் 4 காலாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட்டிரந்ததுடன் 2019 ஆண்டில் காலாண்டுக்கு 01 வீதம் தற்போது 02 குழு நடாத்தப்பட்டுள்ளது. |